# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109703

1. District : Nilgiris மாவட்டம் PS: V&AC காவல்நிலையம் Year: 2022 ஆண்டு FIR No.: 06 மு.த.அ. எண் Date: 27.05.2022 நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day: குற்ற நிகழ்வு நாள் Date from : February 2022 நாள் முதல் Date to: Till date நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : 27.05.2022 காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : 11.00hrs நேரம்
(c) General Diary Reference : Entry No(s). பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் —

4. Type of Information : Written/ Oral : Typed complaint
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: O/o Tamil Nadu Rural Transformation Project Additional Collectrate, The Nilgiris
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி About 4 km west.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : R. Sivalingam குற்றமுறையிட்டவர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ ~~Husband's~~ Name : Reson தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 44 நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : Indian நாட்டினம் (e) Passport No. : — வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : — வழங்கப்பட்ட நாள் Place of Issue : — வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Farmer தொழில் (g) Address : D.No.186, Thumbibettu, Sholurmattam (po) Kotagiri (Tk). The Nilgiris முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Immanuvel, District Executive officer, 2. Naveen Kumar, Assistant, O/o TamilNadu Rural transformation project, Additional Collectrate, The Nilgiris.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: No delay.
குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the Investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ................................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையிட்டவருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R [signature] 27/5/22

Geethalakshmi 27/5/22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் B. GEETHALAKSHMI.
Rank: நிலை ....................No. எண் ..........
INSPECTOR OF POLICE
VAC, THE NILGIRIS.

**நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.6/2022/AC/NI u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act. 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் விவரம்:-**

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

27.05.2022-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலக அலுவலில் இருந்த போது நீலகிரி மாவட்டம், கோத்தகிரி தாலுக்கா, சோலூர்மட்டம் அஞ்சல், தும்பிபெட்டு, கதவு எண்.186 ரேசன் என்பவரின் மகன் திரு.R.சிவலிங்கம் என்பவர் அலுவலகம் வந்தார். அவரிடம் விவரம் கேட்க புகார் கொடுக்க வந்திருப்பதாக கூறியவரிடம் அவர் வைத்திருந்த புகார் மனுவை பெற்றேன். அந்த புகார் மனுவானது கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. நான் அந்த புகார் மனுவை படித்து பார்த்து, புகார் சம்மந்தமாக புகார்தாரரிடம் விசாரித்தும், எதிரிகளின் நடத்தைகள் குறித்து ரகசிய விசாரணை மேற்கொண்டதில், எதிரிகள் அரசு பணி செய்வதற்கு லஞ்சம் வாங்குபவர்கள் என்றும், நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் உள்ள வாழ்ந்து காட்டுவோம் அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் குறிப்பாக பழங்குடியினரிடம் உற்பத்தியாளர் குழுவிற்காக அவர்களிடம் லஞ்சமாக பணம் கேட்டு பெறுவதாக தெரியவருகிறது. மேலும் புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் தெரியவந்தது. மேலும் புகாரின் உண்மைதன்மையயும், நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்தும் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 27.05.2022-ம் தேதி காலை 11.30 மணிக்கு உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.6/2022/AC/NI-ல் ஊழல் தடுப்பு மற்றும்

Signature 27/5/22

கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.6/2022/AC/NI-ல் ஊழல் தடுப்பு சட்ட பிரிவு 7-ன் படி, மேற்படி எதிரிகள் 1) திரு.இமானுவேல், மாவட்ட செயல் அலுவலர், வாழ்ந்து காட்டுவோம் அலுவலகம், கூடுதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பிங்கர்போஸ்ட், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் மற்றும் 2) திரு.நவீன்குமார், உதவி அலுவலர், வாழ்ந்து காட்டுவோம் அலுவலகம்,, கூடுதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பிங்கர்போஸ்ட், உதகமண்டலம், ஆகியோர்கள் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு:- உதகமண்டலம், நாள்:27.05.2022. அனுப்புநர் R.சிவலிங்கம், த/பெ ரேசன், கதவு எண்.186, தும்பிபெட்டு, சோலூர்மட்டம் அஞ்சல், கோத்தகிரி தாலுக்கா, நீலகிரி மாவட்டம் - 643216. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி மாவட்டம். ஐயா/அம்மா, நான் நீலகிரி மாவட்டம், கோத்தகிரி தாலுக்கா, சோலூர்மட்டம் அஞ்சல், தும்பிபெட்டு, கதவு எண்.186-ல் எனது குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். நான் இருளர் இனத்தைச் சேர்ந்த பழங்குடியாவேன். நான் கடந்த 1998-ம் வருடம் உதகமண்டலம் அரசு கலைக்கல்லூரியில் BA இளங்கலை பட்டப்படிப்பு வரை படித்துள்ளேன். தற்பொழுது விவசாயம் செய்தும், நீலகிரி மாவட்ட பண்டைய பழங்குடியினர் குழுவில் மாவட்ட செயலாளராகவும், TNRTP POORVAGUDI TRIBES FARMER PRODUCER COMPANY LIMITED என்ற நிறுவனத்தில் செயலாளராகவும் உள்ளேன். கோத்தகிரி தாலுக்காவில் கடினமாலா, அரக்கோடு, தேனாடு, கெங்கரை, கொணவக்கொரை, குஞ்சப்பனை, கோழிக்கரை ஆகிய கிராமங்களில் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த இருளர் வசித்து வருகின்றனர். நான் அவ்வப்போது அந்தந்த கிராமங்களுக்குச் சென்று எங்களது இனத்தைச் சார்ந்த மக்களின் குறைகளை கேட்டு என்னால் முடிந்த உதவிகளை செய்து வருகிறேன். நீலகிரி மாவட்டம் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தைப்பற்றி மாவட்ட ஆட்சியரின் அலுவலகம் மூலம் தெரிந்துகொண்டு, மாவட்ட வாழ்ந்துகாட்டுவோம் அலுவலகத்திற்கு சென்று அப்போதிருந்த மாவட்ட

Amirthavalli 27/5/22

செயல் அலுவலரை சந்தித்து அவருடைய அறிவுரைப்படி நாங்கள் உற்பத்தியாளர்கள் குழு தொடர்பான விவரங்களைப்பெற்று கோத்தகிரி தாலுக்காவில் உள்ள ஆதிவாசி கிராமங்களில் இருளர் இனத்தைச் சேர்ந்தவர்கள் மூலமாக முதற்கட்டமாக ஒன்பது குழுக்களை 2021 ஆம் வருடம் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மற்றும் ஜனவரி 2022 ஆம் மாதங்களில் ஆரம்பித்து ஒவ்வொரு குழுவிற்கும் உண்டான பங்குகளை நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, கோத்தகிரி கிளையில் செலுத்தி, ஒன்பது குழுக்களின் கணக்கு புத்தகங்களை பெற்றுக்கொண்டோம். ஒவ்வொரு குழுவிலும் குறைந்தது 30 உறுப்பினர்களும், அதில் 65% பெண்களும், 35% ஆண்களும் இருக்க வேண்டும். மேலும் நாங்கள் எங்கள் நிறுவனத்திற்கான தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்களை தேர்வு செய்தோம். அதன்பிறகு உதகமண்டலம் வாழ்ந்து காட்டுவோம் அலுவலகத்தில் இருந்த மாவட்ட செயல் அலுவலர் திரு.இமானுவேல் அவர்களிடம் மேற்படி வங்கி கணக்கு புத்தகங்களையும் மற்றும் தேர்வு செய்யப்பட்ட நிறுவன உறுப்பினர் பட்டியலையும் சமர்ப்பித்தோம். அதற்கு அவர் ஒவ்வொரு குழுவிற்கும் உற்பத்தியாளர் குழுவிற்கான திட்ட துவக்க நிதி ரூ.75,000/- வழங்குகிறோம் என்று கூறி உற்பத்தியாளர் குழுக்களை கொண்டு நிறுவனத்தை ஆரம்பித்து பதிவு செய்ய ஒரு குழுவிற்கு தலா 25,000/- வீதம் ஒன்பது குழுக்களுக்கு மொத்தம் ரூ.2,25,000/-த்தை அந்த அலுவலகத்தில் பணிபுரியும் திரு.நவீன்குமாரிடம் ஒப்படைக்குமாறு அறிவுறுத்தினார். அதன்பிறகு கடந்த 18.02.2022 ஆம் தேதி மேற்படி ஒன்பது குழுக்களுக்கும் அந்தந்த குழுக்களின் வங்கி கணக்குகளுக்கு ரூ.75,000/- அனுப்பப்பட்டிருந்தது. அதன்பிறகு உதகமண்டலம் வாழ்ந்துகாட்டுவோம் அலுவலகத்திற்கு சென்று மாவட்ட செயல் அலுவலர் திரு.இமானுவேலை சந்தித்து ஒன்பது குழுக்களின் வங்கி கணக்குகளுக்கு பணம் ரூ.75,000/- வந்துள்ள விவரத்தை கூறினேன்..அதற்கு அவர் உடனடியாக நிறுவனத்தை பதிவு செய்ய வேண்டுமானால் பணம் ரூ.2,25,000/-த்தை திரு.நவீன்குமாரிடம் கொடுக்குமாறு மீண்டும் அறிவுறுத்தினார். அதன்படி 'நான் ஒருவாரம் கழித்து ரூ.1,00,000/-த்தை

27/5/22

எடுத்துக்கொண்டு மாலை நேரத்தில் திரு.இமானுவேல் அலுவலகத்திற்கு சென்றபோது, நவீன்குமார் அலுவலகத்தில் இல்லாததால் செயல் அலுவலர் திரு.இமானுவேலை சந்தித்தேன். அப்போது அவர் பணம் ரூ.1,00,000/-த்தை அவரே அலுவலகத்தில் வைத்து பெற்றுக்கொண்டு மீதி பணத்தை உடனே கொண்டுவந்து கொடுக்குமாறு அறிவுறுத்தினார். அதன்பிறகு மார்ச் மாதம் முதல் வாரத்தில் எங்கள் குழுக்களுக்கு கரிக்கையூரில் பயிற்சி கொடுத்துக்கொண்டிருந்த போது, அலுவல் நிமித்தமாக வந்த இமானுவேல் மற்றும் நவீன்குமார் ஆகியோர் என்னிடம் மீதி பணம் ரூ.1,25,000/-த்தை கேட்டனர். அப்போது நான் குழுக்களிடமிருந்து வாங்கி வைத்திருந்த ரூ.50,000/-த்தை நவீன்குமாரிடம் கொடுத்தேன். அந்த சமயத்தில் இமானுவேலும் உடனிருந்தார். அதன்பிறகு நாங்கள் கடந்த 23.03.2022 ஆம் தேதி எங்கள் குழுவில் உள்ள தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் ஏழு உறுப்பினர்கள் மாவட்ட செயல் அலுவலர் திரு.இமானுவேலை உதகமண்டலம் அலுவலகத்தில் சென்று பார்த்தோம். அப்போது அவர் அந்த அலுவலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்பாளராக பணிபுரியும் திரு.மௌலி என்பவரிடம் நிறுவனத்தை ஆன்லைன் மூலம் பதிவு செய்ய அறிவுரை வழங்கினார். அதன்படி தமிழ்நாடு புத்தாக்கத்திட்டம் பூர்வகுடி பழங்குடியினர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் என்ற பெயரில் ஆன்லைனில் அந்த அலுவலகத்தில் வைத்தே பதிவு செய்துகொடுத்தார். அதன்படி நிறுவனத்தை பதிவு செய்ததற்கான சான்றிதழை பதிவு செய்த ஒரு மாதம் கழித்து பெற்றுக்கொண்டோம். அதன்பிறகு மீண்டும் செயல் அலுவலர் திரு.இமானுவேல் மற்றும் நவீன்குமார் மீதமுள்ள பணம் ரூ.75,000/-த்தை உடனடியாக கொடுக்குமாறு கேட்டுக்கொண்டே இருந்தார்கள். நான் எனக்கு தெரிந்த அதிகாரிகளிடம் விசாரித்தபோது நிறுவனம் பதிவு செய்ய பணம் எதுவும் கொடுக்க தேவையில்லை என்று தெரிந்துக்கொண்டேன். அதனால் கடந்த ஏப்ரல் மாதத்தில் திரு.இமானுவேல் அவர்களை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்து ஏற்கனவே நிறுவனம் பதிவாகிவிட்டதே எதற்காக பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் கண்டிப்பாக ஒவ்வொரு உற்பத்தியாளர் குழு ஆரம்பிக்கும்போதும் எனக்கு

Geethalakshmi
27/5/22

ஒரு குழுவிற்கு தலா ரூ.25,000/- வீதம் லஞ்சமாக கொடுத்தால் தான் மேற்கொண்டு வரும் அரசு நிதிகளை உங்களுக்கு கொடுக்கமுடியும் என்றும், அவ்வாறு கொடுக்கவில்லையென்றால், அரசால் வழங்கப்படும் நிதிகளை வேறு நிறுவனங்களுக்கு அளித்து விடுவோம் என்று கூறி உடனடியாக பணத்தை கொண்டு வந்து கொடுக்கச் சொன்னார். கடந்த 20.05.2022 ஆம் தேதி திரு.நவீன்குமார் என்னை அவரது செல்போன் எண். எண்.9940798088-ல் என்னுடைய செல்போன் எண்.7639039889-ல் தொடர்பு கொண்டு பணம் ரூ.75,000/-த்தை மாவட்ட செயல் அலுவலர் திரு.இமானுவேல் அவர்கள் கொண்டுவந்து கொடுக்கும்படி கூறுவதாகச் சொன்னார். அதன்பிறகு நான் கடந்த 23.05.2022 ஆம் தேதி மாவட்ட செயல் அலுவலர் திரு.இமானுவேல் அவர்களை அவரது செல்போன் எண்.9894881180-ல் தொடர்பு கொண்டு, திரு.நவீன்குமார் அவர்கள் ரூ.50,000/-த்தை தங்களிடம் கொடுக்குமாறு கூறினார் என்றும், தற்போது அவ்வளவு பணம் இல்லையென்றும் குழுவிடம் வசூலாகவில்லை என்றும் கூறினேன். அவர் ரூ.25,000/-மாவது 27.05.2022 ஆம் தேதி வெள்ளிக்கிழமைக்குள் கொண்டுவந்து திரு.நவீன்குமாரிடம் கொடுத்துவிடுமாறும், மீதி பணத்தை இந்த மாத இறுதிக்குள் கொடுத்துவிட வேண்டும் என்றும், இல்லையென்றால் தங்கள் நிறுவனத்தை கலைத்து வேறொரு தலைவர் மற்றும் செயலாளரை நியமிப்பதாக மிரட்டி போனை துண்டித்தார். நேற்று (26.05.2022) திரு.நவீன்குமார், நான் எனது வீட்டில் இருந்தபோது காலை சுமார் 08.45 மணியளவில் அவருடைய செல்போன் எண்.9940798088-ல் என்னுடைய செல்போன் எண்.7639039889-ல் தொடர்பு கொண்டு பணம் ரூ.25,000/-த்தை செயல் அலுவலர் திரு.இமானுவேல் கேட்பதாகவும், உடனடியாக பணத்தை நாளை அலுவலகத்திற்கு கொண்டுவருமாறு கூறினார். இல்லையென்றால், இதற்கு மேல் அரசிடமிருந்து வரும் நிதிகளை வேறு நிறுவனங்களுக்கு மாற்றிவிடுவோம் என்று கண்டிப்புடன் கூறி போனை துண்டித்தார். அதன்பிறகு நான் யோசித்து எங்கள் குழுவினருடன் ஆலோசித்து உற்பத்தியாளர் குழுவிற்கு அரசால் வழங்கும் நிதியை பெற லஞ்சமாக பணம் கேட்கும் நீலகிரி மாவட்ட வாழ்ந்து

[signature] 27/5/22

காட்டுவோம் அலுவலக மாவட்ட செயல் அலுவலர் திரு.இமானுவேல் மற்றும் திரு.நவீன்குமார் ஆகியோருக்கு லஞ்சமாக பணம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. ஆதலால் இன்று (27.05.2022) காலை 11.00 மணிக்கு நான் புகார் மனு தயார் செய்து மாவட்ட செயல் அலுவலர் திரு.இமானுவேல் மற்றும் அந்த அலுவலகத்தில் பணிபுரியும் திரு.நவீன்குமார் ஆகியோர் லஞ்சமாக கேட்ட 25,000/- ரூபாய் எடுத்துக்கொண்டு வந்து தங்களிடம் புகார் மனு அளிக்கிறேன். எனவே, என்னிடம் 25,000/- ரூபாய் லஞ்சமாக பணம் கேட்கும் நீலகிரி மாவட்ட வாழ்ந்து காட்டுவோம் அலுவலக மாவட்ட செயல் அலுவலர் திரு.இமானுவேல் மற்றும் திரு.நவீன்குமார் ஆகியோர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள ஒப்பம் (XXXX) 27.05.2022. Submitted: Received the above complaint on 27.05.2022 at 11.00 hrs and conducted a preliminary enquiry, registered a case in V & AC, The Nilgiris Cr.No.6/2022 u/s 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 on 27.05.2022 at 11.30 hrs. Sd (XXXX) 27.05.2022 Inspr, VAC, The Nilgiris. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் நீதிபதி, சிறப்பு நீதிமன்றம், உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பிவைத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

27/5/22

(B.கீதாலட்சுமி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.